**செ. கு. எண்: 003** **நாள்: 05.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 5.1.2020

ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள அமைந்துள்ள சூடான் நாட்டில் இயங்கி வரும் செராமிக் டைல்ஸ் கம்பெனியில் 3.12.2019 அன்று கேஸ் கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில், பணியில் ஈடுபட்டிருந்த, நாகப்பட்டினம் மாவட்டம், அகரகொந்தகை கிராமத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் என்பவரின் மகன் திரு. இராமகிருஷ்ணன் மற்றும் கடலூர் மாவட்டம், விருதாசலம் வட்டம், செம்பளாக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு.செல்வராசு என்பவரின மகன் திரு. ஜெயக்குமார் மற்றும் பண்ருட்டி வட்டம், மானாடிகுப்பன் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருவன் என்பவரின் மகன் திரு. ராஜசேகர் ஆகிய மூவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இந்து துயரச் செய்தியை அறிந்த உடனேயே, சூடான் நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொண்டு, இறந்தவர்களின் உடல்களை அடையாளம் கண்டு, அவர்களது குடும்பங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை 4.12.2019 அன்று நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உயிழந்தவர்களின் உடல்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கட்டன.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. இராமகிருஷ்ணன், திரு. ஜெயக்குமார் மற்றும் திரு. ராஜசேகர் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**